# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2055 ● ஆகஸ்ட் 10, 2024 Weekly E-paper ● August 10, 2024







## ஆடிவெள்ளியும், அயிரை மீன் குழம்பும்!

சுப. வீரபாண்டியன்

## இயக்கச் செய்திகள்

## ‘நீ’ தோற்கவில்லை தலைநிமிர்ந்து ‘வா’ !

தலையங்கம்

## 10.5 % வன்னியர் இடஒதுக்கீடு சரியா?

திருப்பூர் மகிழவன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2055 ● ஆகஸ்ட் 10, 2024 Weekly E-paper ● August 10, 2024


# ஆடிவெள்ளியும், அயிரை மீன் குழம்பும்!

சுப. வீரபாண்டியன்






நவீன தொழில்நுட்பங்களுடன் உருவாக்கப்பட்டு இருக்கும் கலைஞர் நினைவிடத்தில் உள்ள, கலைஞர் உலகத்தைப் பார்த்து விட வேண்டும் என்று ஓர் ஆசை இருந்து கொண்டே இருந்தது. நேற்றைக்குத்தான் அந்த வாய்ப்பும் நேரமும் கிட்டின. குடும்பத்தினரோடும் தோழர்கள் மணி, பிரவீன் ஆகியோரோடும் சென்று பார்த்தோம். ஏறத்தாழ இரண்டு மணி நேரம் சுற்றிப் பார்த்த பிறகும், முழுமையாகப் பார்த்து விட்ட நிறைவு இல்லை. பார்த்த வரையில் ஏற்பட்ட வியப்பும் அடங்கவில்லை!

முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் அருகில் அமர்ந்து பலமுறை பேசி இருக்கிறேன். அந்த வாய்ப்பு என் வாழ்நாளில் நான் பெற்ற பெரும்பேறு! ஆனாலும் இந்தக் கலைஞர் உலகத்தில், அவர் அருகிலேயே அமர்ந்து பேசுவது போன்ற தொழில்நுட்ப வளர்ச்சியால் கிடைத்த படங்கள் எங்களை வியக்க வைத்தன.

வீட்டுக்குத் திரும்பும் வழியில் ஏதேனும் ஓர் உணவகத்தில் மதிய உணவை முடித்துக் கொள்ளலாம் என்று திட்டமிட்டோம். ஒரு மரக்கறி (வெஜிடேரியன்) உணவகத்திற்குப் போகலாம் என்றார் என் துணைவியார். ஏன் என்று கேட்டேன். இன்றைக்கு ஆடி வெள்ளி இல்லையா என்றார்.

என்னால் சிரிப்பை அடக்க முடியவில்லை. அதற்கும் நம் உணவுக்கும் என்ன தொடர்பு என்று கேட்டேன். ஏதோ சொல்லுவாங்க என்றார்.

சற்று நேரத்தில், சரி, எந்த உணவகத்திற்கு வேண்டுமானாலும் போவோம் என்று சொன்னார்.

ஒரு விதத்தில் நல்லது. புலால் உணவகத்தில் ஆடிவெள்ளியான இன்று கூட்டம் இருக்காது என்று கருதி, வடபழநியில் உள்ள மதுரை குமார் மெஸ்ஸுக்குப் போனோம்.

எங்கள் எதிர்பார்ப்புக்கு மாறாக, அங்கே கூட்டம் நிரம்பி வழிந்தது. இடம் பிடிப்பதற்குக் கூடச் சற்று நேரம் காத்திருக்க வேண்டியதாயிற்று. எல்லா வகையான புலால் உணவுகளையும் மக்கள் ரசித்தும், ருசித்தும் உண்டு கொண்டிருந்தார்கள்.

என் துணைவியார் அயிரை மீன் குழம்பு இருக்கிறதா என்று கேட்டவுடன், மறுபடியும் எனக்கு ஒரு சின்னச் சிரிப்பு வந்தது. "சாப்பிடுவதுன்னு முடிவு செஞ்சுட்டோம். அப்புறம் என்ன?" என்றார். " நல்லது நல்லது இது கேலிச் சிரிப்பு இல்லை, மகிழ்ச்சிச் சிரிப்பு" என்றேன் நான்.

சுற்று முற்றும் பார்த்தேன். இளைஞர்கள் சற்றுக் கூடுதல். பெரியவர்களும் இருந்தார்கள். பெண்கள், ஆண்கள் என்னும் வேறுபாடுகள் இல்லாமல் எல்லோரும் புலால் உணவின் சுவையில் மூழ்கி இருந்தார்கள். ஆடி வெள்ளி எகிறிப் போயிற்று!

ஒரு பக்கம், கோயில், திருவிழா என்று மக்கள் கூட்டம் கூட்டமாகக் கூடினாலும், மறுபக்கம் மத நம்பிக்கைகள், சடங்குகளில் இருந்து விடுபட்டுக் கொண்டும் இருக்கிறார்கள்.

மகிழ்ச்சியாய் இருந்தது!

சில ஆண்டுகளுக்கு முன்பு, லண்டனுக்குச் சென்றிருந்தபோது, ஒரு ஞாயிற்றுக்கிழமை காலை ஒரு தேவாலயத்தில் நான்கில் ஒரு பங்கு அளவு கூட இல்லாமல், மிகக் குறைவானவர்களே அங்கு கூடியிருந்தார்கள். "ஏன் இப்படிக் கூட்டம் குறைவாக இருக்கிறது?" என்று கேட்டேன். இன்று மட்டும் இல்லை, இப்போதெல்லாம் மிக மிகக் குறைவாகத்தான் ஞாயிற்றுக்கிழமைகளில் தேவாலயங்களுக்கு மக்கள் வருகிறார்கள். அவர்களும் கூட நூற்றுக்கு 90 பேர் வயதானவர்கள்தான் என்றார் நண்பர்.

அன்றைக்கு ஏற்பட்ட அதே மகிழ்ச்சியைப் போல, இன்றைக்கு மீண்டும் என் நெஞ்சுக்குள் அதே மகிழ்ச்சி பூத்தது! ●

# வடக்கு மண்டலம் கூட்டிய ‘குடும்ப ஒன்று கூடல்’ !

மாமல்லபுரத்திற்கு அண்மையில் உள்ள மாமல்லா ரிசாட்டில், திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் 'குடும்ப ஒன்றுகூடல்' நிகழ்வைப், பேரவையின் வடக்கு மண்டலம் ஏற்பாடு செய்திருந்தது. இந்த நிகழ்வைப் பேரவையின் சென்னை மாவட்டச் செயலாளர் திராவிடமணி, மாநில இளைஞரணித் துணைச் செயலாளர் இளமாறன், செங்கல்பட்டு மாவட்டச் செயலாளர் அன்பு, தலைமை நிலையச் செயலாளர் எட்வின் ஆகியோர் முன்வடிவம் கொடுக்க, அதற்கு உறுதுணையாக மாநில இளைஞரணிச் செயலாளர் சந்தானம், சென்னை மாவட்டத் தலைவர் கார்த்தி ஆகியோர் இருந்தனர். இந்த நிகழ்ச்சியைத் திறம்பட ஒருங்கிணைத்து, நடத்திச் செழுமையாக நிறைவு செய்தவர் பேரவை வடக்கு மண்டலத் துணைப் பொதுச் செயலாளர் உமா.

04-08-2024 ஞாயிறு அன்று காலை 9.30 மணிக்குத் தொடங்கிய குடும்ப ஒன்றுகூடல் மாலை 6 மணியளவில் நிறைவுபெற்றது. இதில் கலந்து கொண்ட பேரவைக் குடும்பத்தினர் கலந்துரையாடினார்கள், நடனம் ஆடினார்கள், பாட்டுகள் பாடினார்கள், பலூன் விளையாட்டும் அதில் குழந்தைகளின் பங்கும் வாழ்வின் புறத்தாக்கம் மறந்து, கவலை மறந்து மகிழ்ச்சியில் திளைக்கச் செய்தது, இந்தக் குடும்ப ஒன்று கூடல்.

பேரவைத் தலைவர் சுப.வீரபாண்டியன் அவர்கள், அவர்களின் இணையர் வசந்தா அம்மா அவர்கள், விடுதலைச் சிறுத்தைகள் சட்டமன்ற உறுப்பினர் எஸ். எஸ். பாலாஜி, கலைஞர் தொலைக்காட்சி ஊடகவியலாளர் சரவணன் ஆகியோர் 'குடும்ப ஒன்றுகூடலை' அணிசெய்தனர் என்றால் மிகையில்லை.












## நூல் வெளியீட்டு விழா



சென்னை அண்ணா நூற்றாண்டு நூலக அரங்கில் 03-08-2024 அன்று திருமாவேலன் எழுதி, கருஞ்சட்டைப் பதிப்பகம் வெளியிட்ட "கலைஞரின் பெரியார் நாடு" எனும் நூலை, மாண்புமிகு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வெளியிட்டார். இந்நிகழ்வில் 'பெல்' ராஜன் வரவேற்புரையாற்ற, பேராசிரியர் சுப.வீரபாண்டியன் தலைமை ஏற்று தலைமை உரை ஆற்றினார். நூலினை பேராசிரியர் ஜெயரஞ்சன் பெற்றுக் கொண்டு ஆய்வுரை நிகழ்த்தினார். திருமாவேலன் ஏற்புரை ஆற்றினார். பதிப்பாசிரியர் இக்லாஸ் தொகுத்து வழங்கினார். தோழர் சபானா நன்றியுரையுடன் விழா நிறைவுற்றது.

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

கருஞ்சட்டைத் தமிழர்

## ‘நீ’ தோற்கவில்லை தலைநிமிர்ந்து ‘வா’ !

கடுகு 100 கிராம், சீரகம் 100 கிராம் என்று சொல்வது போல, பிரான்ஸ் ஒலிம்பிக் போட்டி 50 கிலோ பிரீஸ்டைல் பிரிவு மல்யுத்தப் போட்டியில் இருந்து 100 கிராம் எடை கூடிவிட்டது என்று கூறி தகுதிநீக்கம் செய்யப் பட்டுள்ளார் இந்திய ஒன்றிய மல்யுத்த வீராங்கனை வினேஷ் போகத்.

ஒலிம்பிக் போட்டியில் கலந்துகொள்ளும் வீரர்களுக்குச் சில கட்டுப்பாடுகள் இருக்கும். பயிற்சியாளர் இருப்பார், ஊட்டச்சத்து உணவு கொடுக்கும் பிரிவு இருக்கும், மருத்துவர் போன்றவர்களின் மேற்பார்வையில் அந்த விளையாட்டு வீரர் கண்காணிக்கப் பட்டுக்கொண்டு இருப்பார்.

வினேஷ் போகத் முந்தைய இரு விளையாட்டுகளிலும் சரியான எடையில் இருந்திருக்கிறார். ஆனால் தங்கப் பதக்கத்தை நோக்கி முன்னேற வேண்டிய போட்டியில் திடீரென்று 100 கிராம் அளவு எடை கூடிவிட்டதாம். அதனால் வெளியேற்றி விட்டார்கள்.

சரி, அப்படியே என்றாலும் அவரின் பயிற்சியாளர் என்ன செய்து கொண்டு இருந்தார்? ஊட்டச்சத்து - உணவு வழங்கும் குழு என்ன செய்துகொண்டு இருந்தது? என்று எழும் ஐயத்திற்கு விடை இல்லை இதுவரை.

இதுகுறித்து இந்திய ஒலிம்பிக் சங்கம் எத்தகைய அழுத்தமான நடவடிக்கை எடுத்தது? பிரதமர் மோடி, வினேஷுக்கு ஆறுதல் சொன்னதோடு ஒலிம்பிக் அல்லது பிரான்ஸ் அதிகார மையத்திற்கு இந்திய



ஒன்றியத்தின் 'கவலை' யையாவது தெரிவித்திருக்கலாமே!

முன்னால் பா.ஜ.க நாடாளுமன்ற உறுப்பினரும், இந்திய மல்யுத்தக் கூட்டமைப்பின் தலைவருமான பிரிஜ் பூஷண் ஷரண்சிங்கின் மீதான பாலியல் புகாரில் வீதியில் இறங்கிப் போராடிய வினேஷ் போகத், ஒலிம்பிக்கில் போராடியும் தகுதி நீக்கம் செய்யப்பட்டு உள்ளார்.

விளையாட்டு வீரர்கள், எதிர்கட்சித் தலைவர்கள் என்று அனைத்துத் தரப்பிலிருந்தும் கடுமையான விமர்சனங்கள் வருகின்றன.

ஆனாலும் 'மல்யுத்தத்தில் இருந்து விலகுகிறேன். இதற்கு மேல் எனக்கு சக்தி இல்லை' என்று சொல்லி விட்டார் அந்த மல்யுத்த வீரப்பெண் வினேஷ் போகத்.

இது விரக்தியின் உச்சம்.

தங்கம் கிடக்கட்டும். நீ தலைநிமிர்ந்து வா நாட்டிற்கு!

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்
உதவி ஆசிரியர்கள்:
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை– 600 024,
தொலைபேசி: 044-2472 6408

## தலைவரின் 6ஆம் ஆண்டு நினைவு நாள்



அது மரணமன்று!
மொழிப்போரில் தொடங்கி
முதுமையிலும் இயங்கி
விழிமூடும் வரையில்
உழைத்தவனின் ஓய்வு!

-சுப.வீரபாண்டியன்

# 10.5 % வன்னியர் இட ஒதுக்கீடு சரியா ?

**திருப்பூர் மகிழவன்**

திராவிட இயக்கம் என்பது பார்ப்பனரல்லாத மக்களுக்கு அதிகாரத்தில் சமபகிர்வு தரவேண்டும் என்ற நோக்கில், நீதிக்கட்சி ஆட்சியில் கம்யூனல் ஜி ஓ வில் தொடங்கி, இன்று கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் இந்தியாவிலேயே எங்கும் இல்லாத வகையில், 69 சதவீத இடஒதுக்கீடு பின்பற்றப்படக்கூடிய மாநிலமாக தமிழ்நாடு இருந்து கொண்டிருக்கிறது.

1987இல் அஇஅதிமுக ஆட்சியில், இட ஒதுக்கீட்டுக்காக போராடிய 21 வன்னியர்கள் கொல்லப்பட்டார்கள்.

எம்.ஜி.ஆர். அரசு கடைசிவரை இடஒதுக்கீடு வழங்காத நிலையில், 1989 - ஆண்டு மூன்றாம் முறையாக முதல்வர் பொறுப்பேற்ற கலைஞர்தான் வன்னியர்கள் உள்ளிட்ட சீர்மரபினர்(DNC) மற்றும் இன்னும் சில ஜாதிகளை இணைத்து, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் (MBC) என்ற வகுப்பை உருவாக்கி, 20% இடஒதுக்கீட்டை வழங்கினார் கலைஞர். எம்.ஜி.ஆர் ஆட்சியில் போராட்டத்தில் உயிரிழந்த வன்னியர்களுக்கு இழப்பீட்டு தொகையாக 3 லட்சத்தையும், அவர்களின் குடும்பங்களுக்கு மாதம் 3 ஆயிரம் ஓய்வூதியத் தொகையையும் வழங்கினார் கலைஞர்.

ஒரு சிலரின் சுயநல அரசியல் நோக்கத்திற்காக அவர்களின் சமுதாயத்தை புறக்கணிக்கும் வழக்கம், திராவிட இயக்கத்திற்குக் கிடையாது.சீர்மரபினருக்கான இடஒதுக்கீடு, கொங்கு வேளாளர் சமுதாயத்தினரை பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்தது, முஸ்லிம்களுக்கு 3.5% தனி ஒதுக்கீடு, அருந்ததியர் சமுதாயத்திற்கு 3% உள்ஒதுக்கீடு, பழங்குடியினருக்கு 1% இடஒதுக்கீடு என அனைத்தும் கலைஞர் தலைமையிலான தி.மு.க ஆட்சியில் வழங்கப்பட்டவை. 2020இல் வன்னியர்களுக்கு 10.5% தனி ஒதுக்கீடு வேண்டும் என்ற அடிப்படையில் போராட்டமும், சட்டமன்ற தேர்தலை கணக்கில் கொண்டு அரசியல் பேரமும் ஒரே நேரத்தில் நடைபெற்றது. பாமக இரண்டிலும் வெற்றி பெற்றது.

## 10.5% வன்னியர் இட ஒதுக்கீடு

தேர்தல் அறிவிப்பு வருவதற்கு 4 மணி நேரத்துக்கு முன் அவசர அவசரமாக தாக்கல் செய்யப்பட்ட மசோதா தான் இந்த வன்னியர் உள்இடஒதுக்கீடு மசோதா .

தமிழக சட்டமன்றத் தேர்தல் நேரத்தில், இந்த உள்ஒதுக்கீடு வழங்கப்பட்டதால் தேர்தல் ஆதாயத்துக்காக, அன்றைய எடப்பாடி பழனிசாமி அரசு அவசர கதியில் இடஒதுக்கீடு வழங்கியதாக விமர்சனம் எழுந்தது.

பா.ம.க-வின் நீண்டகால கோரிக்கைக்கு கிடைத்த வெற்றியாக இது பார்க்கப்பட்டாலும், சட்டமன்றத் தேர்தலில், இந்த உள்ஒதுக்கீடு எந்த விளைவையும் ஏற்படுத்தவில்லை. பா.ம.க., போட்டியிட்ட 23 தொகுதிகளில் 5 தொகுதிகளில் மட்டுமே வெற்றி பெற்றது. தேர்தல் முடிவுகள் வந்து ஓராண்டாவதற்குள் இந்த சட்டம் ரத்து செய்யப்பட்டது. ஒரு தொகுப்பிற்குள் உள்ள பிரிவினருக்கு உள்ஒதுக்கீடு வழங்க வேண்டும் என்றால் அந்தத் தொகுப்பில் உள்ள மற்ற சமூக பிரிவுகளைக் காட்டிலும் அவர்கள் மிகவும் பின்தங்கியவர்களாக இருக்க வேண்டும். என்பதை வன்னியர் உள்ஒதுக்கீட்டை ரத்து செய்த தீர்ப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஆனால் அரசமைப்புச் சட்ட விதிகளையும் உச்சநீதிமன்றத் தீர்ப்புகளையும் மறைத்து விட்டு, ஜாதிவாரி கணக்கெடுப்பை எடுக்க மறுக்கும் ஒன்றிய பிஜேபி அரசுடன் கூட்டணியில் இருந்து கொண்டே, தன்னுடைய வாக்கு வங்கி அரசியல் நலனுக்காக பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர் ராமதாஸ் அவர்களும், அன்புமணி அவர்களும் தொடர்ச்சியாக உள்ஒதுக்கீட்டுக்குத் தடையில்லை என்று தவறாக பிரச்சாரம் செய்து வருகிறார்கள்.

இந்நிலையில் தமிழ்நாடு அரசுப் பணிகளில் 2013 முதல் 2022 வரையிலான 10 ஆண்டுகளில் வன்னியர்கள் பெற்றிருக்கும் பிரதிநிதித்துவம் குறித்த RTI தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதன் அடிப்படையில் , பா.ம.க. தற்போது கோரிவரும் 10.5% உள்ஒதுக்கீட்டை விட அதிகமான பதவிகளை வன்னியர்கள் பெற்றுள்ளனர்.

1. MBC / DNC 20% இட ஒதுக்கீட்டின் கீழ் முதுகலை மருத்துவச் சேர்க்கை பெற்ற 1,363 மாணவர்களில், வன்னியர்கள் 694 பேர் (10.2%), மற்றவர்கள் (MBC) 636 பேர் (9.1%) மற்றும் DNCயினர் 279 பேர் (4%) .
2. மொத்தமாக, தேர்ந்தெடுக்கப்பட்ட 1,919 சப்-இன்ஸ்பெக்டர்களில், 327 (17%) வன்னியர்கள். பிற MBC ஜாதியினர் 152 பேர் (7.9%) , DNC 126 பேர் (6.6%).
3. மொத்தமுள்ள 8379 உதவி அறுவை சிகிச்சை நிபுணர் பதவிகளில், வன்னியர்கள் 1,185 (10.8%) பேர், மருத்துவத் துறையின் மொத்த ஆட்சேர்ப்பில் 1,433 (17.1%) வன்னியர்கள் உள்ளனர்.
4. ஆசிரியர்களைப் பொறுத்தவரை, 2021இல் மட்டும் TR-Bஆல் MBC/DNC ஒதுக்கீட்டின் கீழ் பணியமர்த்தப்பட்ட 634 முதுநிலை ஆசிரியர்களில், 383 பேர் வன்னியர்கள். மொத்தமுள்ள 3,044 முதுநிலை ஆசிரியர்களில் வன்னியர்களின் பங்கு 17.5% ஆகும்.
5. எஞ்சினியர் பதவிகளில் வன்னியர்கள் எண்ணிக்கை 14.4% ஆகும்.
6. நீதித்துறையில் சிவில் நீதிபதி பதவியில் வன்னியர்கள் 9.9%,

பா.ம.க. மருத்துவர் இராமதாஸ் கேட்கும் 10.5% என்ற கோரிக்கை உண்மையாகவே வன்னியர்களுக்கு எதிரான கோரிக்கை என்பதையும் இந்தத் தரவுகள் உறுதி செய்கின்றன.

உண்மையான தரவுகள் வெளிவந்த பின்னரும் தங்களின் தனிப்பட்ட அரசியல் இலாபத்திற்காக,

அரசியல் நாகரிகத்தை புறந்தள்ளி, முதல்வரை ஒருமையில் பேசும் மருத்துவர் இராமதாஸ் அவர்களின் பேச்சும், வாய்க்கு வந்தபடியெல்லாம் பொய்ச் செய்திகளை பேசி பரப்பி வரும் அன்புமணி அவர்களின் பேச்சும் கண்டிக்கத் தக்கதாகும். ●

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian